மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது ரப்பர் தோட்டக் கழகம் அமைப்பது பற்றிய மூலக் கேள்வி, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிஉறுப்பினர் வழக்கம்போல் இந்த போனஸ் பிரச்னையை அதற்குள்ளே நுழைத்திருக்கிறார்கள் இருந்தாலும், அரசினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்ட ஒரு நிறுவனத்திற்கு போனஸ் கொடுக்க முடியாது. ஆகவே தான், உங்களுக்கு மகிழ்ச்சி தருகின்ற வகையிலே இந்த போனஸ் கொடுப்பதையெல்லாம் ஒரு பிரச்னையாக உள்ளடக்கி இது ஒரு கழகமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

கொல்லிமலையில் வேட்டையாடுதலைத் தடுக்கும் திட்டம்

105 *வினா எண்.—18746 திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் வேட்டையாடுதலைத் தடுத்து வன விலங்குகளைஅதிகமாக வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கொல்லிமலையில் காப்புக் காடுகளில் வேட்டையாடுதலைத் தவிர்க்க, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, வனவிலங்குகள் பாதுகாக்கப்பட்டு இயற்யையாகவே வளர்ந்து பெருக வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்காலத்தில் அங்கே புலி, மான் போன்ற மிருகங்கள் இருந்தன. குறிப்பாக, தற்போது அங்கே காட்டுப் பன்றி, கரடி போன்ற மிருகங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இன்னும் அதிகமான பாதுகாப்பு கொடுத்து, புலி, மான் போன்ற மிருகங்களை வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கொல்லிமலைப் பகுதி 5 பகுதி களாகப் பிரிக்கப்பட்டு, அவைகளில் 3 ஏற்கனவே ஒதுக்கப்பட்ட காடுகளாக, ரிசர்வ்ட் பாரஸ்டாக இருந்தது. மேலும் 2 பகுதிகளை ரிசர்வ்ட் பாரஸ்டாக அறிவித்திருக்கிறோம். அதை ஒரு வனச் சரகமாக அறிவித்திருக்கிறோம். ஆகவே, இப்போது அங்கே வன விலங்குகளைப் பாதுகாக்கின்ற முயற்சிகள் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டை ஆடுவதைப் பொழுதுபோக்காக கருதுபவர்களுக்கு அரசாங்கம் சட்டதிட்டங்கள் போட்டு நிறுத்தலாம். ஆனால் சில பெரும் பணக்காரர்கள். சில உயர்மட்ட அதிகாரிகள்,

அரசியல்வாதிகள் பொழுதைப் போக்குவதற்காக வேட்டையாடு கிறார்கள். அவர்களை வன இலாகாவினர் தடுக்க முடியவில்லை. ஆகவே, அதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரி செயல்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யார் யார், எந்தெந்த பெரியவர்கள் எந்தெந்த அரசியல்வாதிகள் தற்போது இதிலே ஈடுபடுகிறார்கள். என்ற விவரத்தைத் தந்தால், குறிப்பாக அவர்களைக் கண்காணித்து, இந்தச் சட்டத்தை அவர்கள் மீது பாயும் அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் தனியார்கள் சார்பில் சர்க்கரை ஆலைஅமைக்கும்திட்டம்

55 * வினா எண். —15951 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார்கள் சார்பில் சர்க்கரைஆலை அமைக்க தமிழக அரசு மத்திய அரசுக்கு 1982—83 ஆம் ஆண்டில் சிபாரிசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஒன்பது விண்ணப் பங்கள் அரசுக்குக் கிடைக்கப்பெற்று, அவற்றில் ஏழு விண்ணப் பங்கள் மைய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று விண்ணப்பங்களுக்கு மைய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது. ஒரு விண்ணப்பம் விண்ணப்பதாரரால் திரும்பப் பெறப்பட்டு விட்டது. மற்றொன்று மாநில அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 9 விண்ணப்பங்களில், 7 விண்ணப்பங்களை அனுப்பி யுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 7 விண்ணப்பங்கள் என்றால், அவைகள் எந்தெந்த இடங்களில் என்பதையும் மத்திய அரசு அனுமதித்துள்ள அந்த 3 இடங்கள் எந்தெந்த இடங்களில் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(1) பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிகல்ஸ் லிமிடெட், பள்ளிப்பாளையம், சேலம் மாவட்டம்.

(2) தாராபுரம் சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், குள்ளப்பாளையம், தாராபுரம் வட்டம், பெரியார் மாவட்டம்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS